Press Release No : 781

Date : 22/9/08

ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 600 006.

செய்திக்குறிப்பு

மேல்நிலைப் பள்ளி கணினிப் பயிற்றுநர்களுக்குச் சிறப்பு தேர்வு ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பயிற்றுநர்களாக பணியாற்றி வந்தவர்களைச் சிறப்புத் தேர்வு நடத்தி முறையான பணியிடத்தில் நியமனம் செய்ய அரசு ஆணையிட்டது. அவ்வாணையினைப் பின்பற்றி தேர்வு நடத்த ஆசிரியர் தேர்வு வாரியம் நடவடிக்கை எடுத்து வரும்போது, உயர்நீதி மன்றத்தில் பதிலாக்கம் செய்யப்பட்ட ரிட்மனுக்களின் மீது உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் தேர்வு நடத்தாமல் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது மேற்கண்ட கணினி பயிற்றுநர்களுக்குத் தேர்வு நடத்துவதை உயர்நீதி மன்றம் அனுமதித்து ஆணையிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஏற்கனவே விண்ணப்பித்த மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிவரும் கணினிப் பயிற்றுநர்களுக்கு 12-10-2008 அன்று சிறப்புத் தேர்வு நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான அழைப்புக் கடிதம் விரைவில் அனுப்பப்பட உள்ளது.

தலைவருக்காக.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9